**M.C.O.P. No.106/2025**

**Deposition of P.W. 1**

**Dated : 04.11.2025**

**Name : Thiru.சுஜின்**

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

முதல் விசாரணை தொடர்ச்சி

(மனுதாரின் கடவு சீட்டு சான்றிட்ட நகல் ம.சா.ஆ.19 ஆகவும், மீனவர் கூட்டுறவு சங்கத்தின் மனுதாரர் உறுப்பினராக உள்ளதற்கான சான்றிதழ் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.20 ஆகவும், மனுதாரரின் மீனவர் அடையாள சான்றிதழ் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.21 ஆகவும், மனுதாரின் பிறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.22 ஆகவும், மனுதாரரின் மாற்று சான்றிதழ் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.23 ஆகவும், முத்து நியூரோ சென்டர் மருத்துவமனையில் மருத்துவ ரசீது எண்ணிக்கை 2 அசல் ம.சா.ஆ.24 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றது)

**2 மற்றும் 4 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஓட்டுநர் உரிமம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. நான் ஓட்டி சென்ற வாகனம் விஜிலா என்பவருக்கு உரிமையானது என்றால் சரிதான். விஜிலா என்பவருக்கு என்னிடம் ஓட்டுநர் உரிமம் இல்லை என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். விபத்திற்கு இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பு நான் ஐ.டி.ஐ படித்து கொண்டிருந்தேன். பின்பு ஐ.டி.ஐ பாதியிலேயே நின்று விட்டேன். பின்பு நான் எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றால் சரியல்ல. மீன்பிடிக்கும் வேலைக்கு சென்று வந்தேன். விபத்து சமயத்தில் ஹெல்மெட்

அணியவில்லை. ஓட்டுநர் உரிமம் இல்லாமலும், ஹெல்மெட் அணியமலும் சட்டத்திற்கு விரோதமாக கவனக்குறைவாக ஓட்டியதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. முட்டம் அரசு மருத்துவமனையிலிருந்து முட்டம் ஹார்பருக்கு செல்லும் சாலையில் சென்றுகொண்டிருந்தேன். 1ம் எதிர்மனுதாரர் எதிர்திசையில் வாகனத்தை ஓட்டி வந்தார். விபத்து முழுவதும் என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதனால் எனக்கு இழப்பீடு கோரமுடியாது என்றால் சரியல்ல. என்னுடைய நண்பர் பின் இருக்கையில் அமர்ந்து வந்தவர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரில் யார் வாகனத்தை ஓட்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் ஓட்டியதாக குறிப்பிட்டார். இரண்டு வாகனங்களும் நேருக்கு நேராக மோதியது. இரண்டு வாகனத்திற்கும் முன் பகுதியில்தான் சேதம் ஏற்பட்டது என்றால் என்னுடைய வாகனத்திற்கு மட்டும் தான் சேதம் ஏற்பட்டது. நான் குணமடைந்த பின்பு தான் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டேன் என்றால் சரியல்ல. தற்போதும் தலையில் ஏற்பட்ட காயத்திற்கு அடுத்தவாரம் ஸ்கேன் எடுப்பதற்கு சிகிச்சைக்கு வர சொல்லியுள்ளார்கள். ம.சா.ஆ.12 ல் தாக்கல் செய்துள்ள மருத்துவ ரசீதுகளில் உள்ள கட்டணங்கள் வரிகை எண்.30 ல் குறிப்பிடப்பட்ட impatient cash bill குறிப்பிடப்பட்டுள்ளது என்பதால் மற்ற கட்டண ரசீதுகள் பெற உரிமையில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.14 ல் உள்ள முன்பணம் செலுத்தியதற்கான ரசீதுகள் inpatient discharge bill ல் அந்த கட்டணம் வரும் என்பதால் முன்பண ரசீதின் அடிப்படையில் எந்த தொகையும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதார்ரை வழக்கிற்கு

முன்பே எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வேறு ஏதேனும் மெடிக்கல் காப்பீடு மூலம் தொகை பெற்றுள்ளேனா என்றால் இல்லை. பல தலைப்புகளில் நான் கோரியள்ள இழப்பீடுகள் கிடைக்கத் தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் 2 மற்றும் 4 எதிர்மனுதாரா்களுக்கு எதிராக மனுவானது செலவுக்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் சரியல்ல.

**<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2 மற்றும் 4 எதிா் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.